

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கா.வீ.தியாகராஜன் தலைமையில் வி.இ.மதியழகன் எம்.சி. (15வது மண்ட குழு தலைவர் பகுதி கழக செயலாளர்) முன்னிலையில் – சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 1047 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் பொதுக்கூட்டம் மற்றும் பிறந்தநாள் பாடல் வெளியீட்டு நிகழ்ச்சி ஈஞ்சம்பாக்கம், திருவள்ளுவர் சாலை ஈஞ்சம்பாக்கம் பெத்தேல் நகர் பகுதியில் நடைபெற்றது. வட்டக் கழகச் செயலாளர் எஸ்.கர்ணா, கி.சத்தியவேலன், விமலாகர்ணா , எஸ். ஜானகிராமன், மா.மகேஸ்வரன், ஜி.விஜயகுமார், வி.எஸ்.சுதா, எம்.பாஸ்கரன் உள்ளிட்ட பலர் வரவேற்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமை கழகப் பேச்சாளர்கள் தமிழ் கேள்வி கலைஞர் ஆர்மி ஒருங்கிணைப்பாளர் செந்தில்வேல் , கு.சுருதி தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மத்திய பகுதிக் கழகச் செயலாளர், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த்ரமேஷ், மாவட்ட இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினர்.

### கா.வீ.தியாகராஜன் தலைமை! நீலாங்கரை வி.இ.மதியழகன் எம்.சி. முன்னிலை! சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# 1047 பேருக்கு நலத்திட்ட உதவிகள் - பொதுக்கூட்டம் ! துணை முதல்வர் பிறந்தநாள் பாடல் வெளியீட்டு விழா!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, டிச.18 -

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 1047 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் பொதுக் கூட்டம் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் பாடல் வெளியீட்டு நிகழ்ச்சி 16.12.2024) - திங்கட் கிழமை மாலை 6 மணிக்கு, ஈஞ் சம்பாக்கம், திருவள்ளு வர் சாலை ஈஞ்சம்பாக்கம் பெத் தேல் நகர் பகுதியில் நடை பெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கா.வீ.தியாகராஜன் தலைமை வகித்தார்.

பகுதிக் கழகச் செயலாளர், 15 வது மண்டலக் குழுத் தலைவர் நீலாங்கரை வி.இ. மதியழகன் முன்னிலை வகித்தார்.

வட்டக் கழகச் செயலாளர் எஸ்.கர்ணா, கி.சத்தியவேலன், விமலாகர்ணா , எஸ். ஜானகிராமன், மா.மகேஸ்வரன், ஜி.விஜய குமார், வி.எஸ். சுதா, எம்.பாஸ்கரன், து.ராஜா ,டி.தாஸ் ,க.குருபிரசன்னா , க.ஏகாம்பரம், கே.வி.சாந்தப்பன், எஸ்.ஆறுமுகம், கே. குமார், ஏ.கே.ஆனந்த், பி.என். ஜோதி, டி.சீனிவாசன், இளையபெருமாள் , பி.முனுசாமி, எஸ்.கே. பாலாஜி , தி.ரேவதி தியாகராஜன் , பி.வால்டர் , அன்புகார்த்திகேயன் , பி.பிரபாகரன் , ஜி.எம்.பாலாஜி, கே. தேவேந்திரன், கே.தினேஷ் , சு.வெங்கடேஷ் , ஆர் .சங்கர், எஸ்.அசோக், எஸ்.சத்யா, எஸ்.சுனிதா, பி.சம்பத் , எம். சங்குமார், ஆர்.சுரேஷ்குமார் கே.ராஜ சேகர், பி.பிரகாஷ், எல்.பாலாஜி ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிர மணியன், தலைமை கழகப் பேச்சாளர்கள் தமிழ் கேள்வி - கலைஞர் ஆர்மி ஒருங்கிணைப்பாளர் செந்தில்வேல், கு.சுருதி, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மத்திய பகுதிக் கழகச் செயலாளர், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த்ரமேஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் பாலவாக்கம் க.சோமு, எஸ்.குண சேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு. மனோகரன், வாசுகி பாண்டியன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன், ஜி.வெங்க டேசன், எஸ்.சங்கீதா பாரதிராஜன், எம்.கே.ஏழுமலை, மேடவாக்கம் ப.ரவி, மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் எஸ்.பொன்னுவேல் தா. பஷீர், ஆ.அரிகிருஷ் ணன், சி.பிரதீப், ரத்னா லோகேஸ்வரன், ஜெ.இ. பாண்டியன், பா.அருண் குமார், எம்.பார்த்திபன், என்.அனிஷ், த.விஜயபாலன், கி.ஸ்டாலின்மொழி,

பகுதிக் கழகச் செயலாளர்கள் எம்.கிருஷ்ண மூர்த்தி, இரா.துரைராஜ், நொளம்பூர் வே.ராஜன், கே.கண்ணன், மு.ராசா, துரை கபிலன், அரிமா சு.சேகர், அயப்பாக்கம் அ.ம. துரை வீரமணி மற்றும் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், சோழிங்கநல்லூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் இறுதியில் பி.ரவி, ஆர்.குமார், த.செல்வின், அலை ஓசை அ.ரகு, எஸ். மணி, அ.பிரபு ஆகியோர் நன்றி கூறினர்.

### கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களின்

# உட்கட்டமைப்பை மேம்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

### மக்களவையில் - கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, டிச.18-

கூட்டுறவுக் கல்வி மற்றும் அதன் மேலாண்மைப் பயிற்சி நிலையங்களை வலுப்படுத்தவும், பயிற்சி நிலையங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும், கிராமப்புற கூட்டுறவு வங்கிகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கான வருவாய்த் தேவையை ஈடுசெய்யவும் ஒன்றிய அரசு வகுத்துள்ள திட்டங்கள் என்ன என்பன போன்ற பல்வேறு



கேள்விகளை ஒன்றிய கூட்டுறவுத்துறை அமைச்சகத்திடம் மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் வினவினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

கூட்டுறவு மேலாண்மை நிலையங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்த தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்கள் மற்றும் முன்னெடுக்க உள்ள திட்டங்களின் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார் . கூட்டுறவுக் கல்வி மற்றும் அதன் மேலாண்மைப் பயிற்சி நிலையங்களை வலுப்படுத்த மாநில அரசுகளுக்கு உதவும் வகையில் ஒன்றிய கூட்டுறவுத்துறை அமைச்சகம் வகுத்துள்ள திட்டங்கள் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

மக்களுக்கான கடன் தொகையை குறைந்த வட்டியில் வழங்வகுதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ள கிராமப்புற கூட்டுறவு வங்கிகள், மக்களின் வளர்ச்சித் திட்டங்களுக்கான வருவாயினையும் ஈடுசெய்யும் வகையில் ஒன்றிய அரசு வகுத்துள்ள திட்டம் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

### நாகை அருகே கனமழையால் சுவர் இடிந்து விழுந்ததில் இறந்த

# மாணவன் கவியழகன் குடும்பத்திற்கு ரூ.4 லட்சம் நிதி உதவி!

### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்! என்.கௌதமன் – க.ராஜேந்திரன் பங்கேற்பு!

நாகை, டிச. 18 -

நாகை மாவட்டம், நாகை ஒன்றியம் செம்பியன்மகாதேவி கிராமம் விநாயகன் தோப்பை சேர்ந்த முருகதாஸ் விவசாயக் கூலித் தொழிலாளி இவரது மகன் கவியழகன், செம்பியன்மகாதேவி அரசு உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்து வருகிறார். 11.12.2024 இரவு பெய்த கனமழையில் சுமார் 11.45 மணியளவில் அவரது வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் அடிபட்டு கவியழகன் என்பவருக்கு இடது காதில் ரத்தக்கசிவு வரப் பெற்றது. மேலும் தந்தை முருகதாஸ், தாயார் லெட்சுமி, தங்கை சிவஸ்ரீ ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது. உடன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அனைவரும் ஒரத்தூர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அப்போது மருத்துவர் பரிசோதித்ததில் கவியழகன், ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்துள்ளார்.

முருகதாஸ், .லெட்சுமி, சிவஸ்ரீ ஆகியோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீட்டிற்கு திரும்பினர். இதையடுத்து வீட்டின் சுவர் இடிந்து விழுந்து இறந்த கவியழகன் குடும்பத்திற்கு பேரிடர் நிவாரண நிதியாக ரூ.4,00,000க்கான காசோலையினை மாவட்டப் பொறுப்பு அமைச்சர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்.



சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, மதுரவாயல் தெற்குப் பகுதி, 151வது வட்ட கழக செயலாளர் அ.மோசஸ் ஏற்பாட்டில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதயநாள் விழாவை முன்னிட்டு தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்கள் ஆத்தூர் சபரி.வாலாஜா தமிழ்வாணன்.மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி, தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாச்சலம், பகுதி கழக நிர்வாகிகள் வே. மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ்.பாரதி எம்.சி., வட்ட கழக செயலாளர் எஸ்.இரமேஷ்ராஜ், மாவட்ட பிரதிநிதிகள் வி.விஜயன், ஆர்.சேகர், கோ.ராமலிங்கம். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ச.சங்கர்கணேஷ் எம்.சி., செ.ரவி மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயல்வீரர்கள், கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள், அனைவரும் கலந்து கொண்டனர்.


# சென்னைத் தெற்கில் ஒரு மாதம் முழுவதும்

# “உதயநிதியின் உதயநாள்” விழா

## 364 சொற்பொழிவாளர்கள் பங்கேற்கும் 182 பிறந்தநாள் கூட்டங்களின் “இன்றைய நிகழ்ச்சிகள்”



18.12.2024 - புதன்கிழமை

| வ.எண் | சொற்பொழிவாளர்கள் | இடம் | தலைமை |
|---|---|---|---|
| 1. | வேங்கை சந்திரசேகர்<br>முனைவர் எஸ்.திவ்யா | 172 வட்டம் – கருமாரியம்மன் கோவில் அருகில், நேருநகர், சைதாப்பேட்டை கிழக்கு பகுதி. | நேருநகர் எஸ்.பாட்சா<br>வட்டச் செயலாளர் |
| 2. | தஞ்சை காமராஜ்<br>தி.பிரபு | 129 வட்டம் – தசரதபுரம், மெயின்ரோடு, கலைஞர் நகர் வடக்கு பகுதி,விருகம்பாக்கம். | அ.ஸ்ரீதர்<br>மாவட்ட பிரதிநிதி |
| 3. | திப்பம்பட்டி ஆறுசாமி<br>சி.கா.சுகன் மந்த்ரன் | 177 அ வட்டம் – தண்டீஸ்வரம் நகர், மெயின்ரோடு, வேளச்சேரி மேற்கு பகுதி. | அருண் நடராஜன்<br>இ.அணி - வ.து.அமைப்பாளர் |
| 4. | சேப்பாக்கம் பிரபாகரன்<br>இ.முத்துசெல்வன் | 198 வட்டம் – தேவராஜ் நகர், முதலாவது மெயின் ரோடு, சோழிங்கநல்லூர் மத்திய பகுதி. | பா.தேவகுமார்<br>வட்டச் செயலாளர் |
| 5. | குன்னூர் ஜாகிர் உசேன்<br>செ.பவண்யா | 152 வட்டம் – கரூர் வைஸ்ராயா வங்கி அருகில், வளசரவக்கம், மதுரவாயல் தெற்கு பகுதி. | எஸ்.பாரதி MC<br>பகுதி துணைச் செயலாளர் |
| 6. | வழக்கறிஞர் சிவஜெயராஜ்<br>ப.வெங்கடேசன் | 195 வட்டம் – பல்லவன் குடியிருப்பு, மேட்டுக்குப்பம் சேழிங்கநல்லூர் கிழக்கு பகுதி. | க.ஏகாம்பரம்<br>வட்டச் செயலாளர் |

9444129952

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிப்போர் :

மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அளவிலான அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். எனவே கழகத் தோழர்கள் பெருந்திரளாக இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

## சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

அன்புடன் : அமைச்சர் மா.சுப்பிரமணியன் B.A., LL.B.,
மாவட்ட கழக செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.